**செய்தி வெளியீடு எண்: 591** **நாள்: 08.10.12**

பதிவுத்துறை சீராய்வு கூட்டம்

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களின் பதிவுத்துறை வருவாய் மற்றும் பணி முன்னேற்றம் குறித்த சீராய்வு கூட்டம்.

சென்னை – **08.10.2012**

தமிழ்நாடு அரசு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு அமைச்சர் திரு. B V ரமணா அவர்கள் தமிழ்நாடு பதிவுத்துறையின் பணிகள் குறித்து சீராய்வு மேற்கொண்டார். இக்கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் தொழில்துறை கூட்டரங்கில் இன்று **(08.10.2012)** பிற்பகல் நடைபெற்றது. இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிவுத்துறையின் செயல்பாடுகள் குறித்தும், முத்திரைத் தீர்வை, பதிவுக்கட்டணம் மற்றும் இதர இனங்கள் குறித்த வருவாய் முன்னேற்றம் குறித்தும் இத்துறை அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல், சார்பதிவாளர் மற்றும் இதர பதிவுத்துறை அலுவலகங்களுக்கு வருகைதரும் பொது மக்களுக்கான வசதிகளை மேம்படுத்துதல், பதிவுத்துறையில் பொது மக்களுக்கு தடையற்ற, விரைவான, வெளிப்படையான சேவை வழங்குதல் ஆகிய பொருட்கள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

சென்ற **2011–12** நிதியாண்டில் செப்டம்பர் மாத இறுதியில் பதிவுத்துறையின் வருவாய் ரூ.**2805.07** கோடி ஆகும். ஆனால் நடப்பு **2012–13** நிதியாண்டில் இதே கால அளவில் ரூ.**3417.65** கோடி வருவாய் பதிவுத்துறையால் ஈட்டப்பட்டுள்ளது. அது கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் **21.84** சதவிகிதம் கூடுதலாக ஈட்டப்பட்டுள்ளது.

அதாவது ரூ.612.58 கோடி அதிகமாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிவுத்துறை நடப்பு நிதியாண்டில் வருவாய் இலக்கு ரூ.8500 கோடி அடையவேண்டும் என அறிவுரை வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் சொத்தின் மதிப்பு உயர்ந்துள்ள நிலையில் அதன் தாக்கம் பொதுமக்களை பாதிக்கக்கூடாது என்ற உயரிய நோக்கோடு ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை 6% லிருந்து 5% ஆக குறைக்கப்பட்டது. மேலும், வழிகாட்டி மதிப்பு உயர்வினால் ஏழை எளிய மக்கள் பாதிக்காத வண்ணம் ஆவணங்களுக்கு வழங்கப்பட்டு வந்த முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக்கட்டண விலக்கு வரம்பு ரூ.5,000/– லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணை வாயிலாக ஏழை எளியவர்கள் தங்களுக்கென சிறிய வீட்டு மனைகளையோ அல்லது விவசாய நிலங்களையோ முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக்கட்டண விலக்குடன் வாங்கி பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு (சட்டமன்ற விதி 110ன் கீழ்)இன்படி 2012–13 ஆம் ஆண்டில் 17 ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகங்கள் மற்றும் 48 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்த அரசு கட்டடம் கட்டுதல் ஆகியவற்றிற்கு மொத்த மதிப்பீடு ரூ.48.90 கோடி நிதி ஒதுக்கீட்டில் விரைவில் அரசாணை வெளியிடப்பட்டு கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

பதிவு பொதுமக்களுக்கு தடையற்ற, விரைவான சேவை வழங்குதல் குறித்து 2011–12 ஆண்டு அறிவிப்பின்படி 17 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு மின்னாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், நடப்பாண்டில் (2012–13) 150 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் மின்னாக்கிகள் வழங்க அரசாணை வெளியிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

முத்திரைச் சட்டம் பிரிவு 47A இன் கீழ் 15,795 இனங்களில் ரூ.440.32 கோடி முடங்கியுள்ளது என்றும், வருவாய் மீட்பு சட்டத்தின் கீழ் 55,304 இனங்களில் ரூ.251 கோடி முடங்கியுள்ளது என்றும், வருவாய்த்துறை மற்றம் பதிவுத்துறை அலுவலங்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு இந்த வருவாயை முழுமையாக வசூலித்திட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், பதிவுத்துறைக்கு அரசால் வழங்கப்பட்ட வருவாய் இலக்கினை அடைய தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிவுத்துறை அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் அரசு செயலாளர் திரு சுனில் பாலிவால், இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை, பதிவுத்துறை தலைவர் முனைவர் இரா.பழனிசாமி, இ.ஆ.ப.., மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**